**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவிடைமருதூர்**

முன்னிலை: **திரு.நா.சிவபழனி, B.A.,B.L,**

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திருவிடைமருதூர்

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 27ஆம் நாள் வெள்ளிக் கிழமை

**அசல் வழக்கு எண். 41/2021**

**(CNR.No. TNTJ 270004882021)**

----

பன்னீர்செல்வம் ...... வாதி

/எதிராக/

1. சுந்தரேசன்
2. ராஜவேலு
3. பழனி (எ) சங்கர் ...

...பிரதிவாதிகள்

இத்தாவா இந்நீதிமன்றத்தால் கடந்த 16.04.2021அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.S.R.முரளி, B.L.,** அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.C.கோவிந்தரஜன்,B.A.,B.L.,** அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு சாட்சியங்கள், ஆவணங்கள் மற்றும் வாதங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டு, இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.

**தீர்ப்புரை**

தாவா நிலங்களில் பிரதிவாதியோ அல்லது அவரது ஆட்களோ, அல்லது அவரது முகவர்களோ, அல்லது பிரதிவாதியிடம் உரிமைகோரும் மற்ற நபர்களோ வாதிக்கு சொந்தமான தாவா சாகுபடி அனுபவத்தினை தடுக்கவோ, இடையூறு செய்யவோ, ஆக்கிரமனம் செய்யவோ கூடாது எனவும், அதனை உடனடியாக தடுக்கும் பொருட்டு ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்ககோரியும், செலவுத்தொகைக்காகவும் இத்தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.03.27 17:44:43 +0530

**<u>வழக்குரையின் சுருக்கம்</u>**

2. இத்தாவாவில் விவரிக்கப்பட்டுள்ள சொத்து திருவிடைமருதூர் தாலுக்கா, திருமங்கலக்குடி கிராமம், 1) புல எண்.188/1–ல் உள்ள 9 ஏக்கர் 30 செண்டில் நடுபாகம் 3 ஏக்கர் 84 செண்ட். 2) புல எண்.188/1–ல் உள்ள 9 ஏக்கர் 30 செண்டில் மேல்புறம் 1 ஏக்கர் 02 செண்ட் நஞ்சை மற்றும் புல எண்.188/2–ல் உள்ள 32 செண்டில் 16 செண்ட் புஞ்சை, புல எண் 188/3–ல் உள்ள 23 செண்ட் நஞ்சை, 3) புல எண்.188/1–ல் உள்ள 9 ஏக்கர் 30 செண்டில் 1 ஏக்கர் 03 செண்ட் நஞ்சை மற்றும் புல எண்.188/2–ல் உள்ள 32 செண்டில் தென்பாகம் 16 செண்ட் புஞ்சை, 4) புல எண்.181/10–ல் உள்ள 28செண்ட் புஞ்சை 5) புல எண்.181/11–ல் உள்ள 30 செண்ட் மற்றும் புல எண்.181/12–ல் உள்ள 16 செண்ட் புஞ்சை புல எண்.179/9–ல் உள்ள 44 செண்ட் நிலத்தில் 34 செண்ட் புஞ்சை மற்றும் புல எண்.179/10–ல் உள்ள 10 செண்ட் புஞ்சை புல எண்.179/11–ல் உள்ள 13 செண்ட் புஞ்சை ஆக கூடுதல் 57 செண்ட் புஞ்சை. புல எண் 179/12–ல் உள்ள 14 செண்ட் புஞ்சை ஆக கூடுதல் 7 ஏக்கர் 66 செண்ட் விவசாய சாகுபடி நிலங்கள். மேற்படி நிலங்கள் இனிவரும் பத்திகளில் தாவா நிலங்கள் என்று வாதியால் அழைக்கப்பட்டுள்ளது.

3. தாவா நிலங்கள் யாவும் வாதியால் வாதியினுடைய சொந்த உடலுழைப்பின் மூலம் 19.11.1996, 24.03.1998, 31.03.1998, 22.12.1999, 13.10.1999, 03.03.2000 ஆகிய தேதிகளில் கிரயம் பெறப்பட்ட நிலங்கள் ஆகும். மேற்படி நிலங்கள் விவசாய சாகுபடிக்கு ஏற்ற நிலங்கள் ஆகும். வாதி 1972 முதல் 2017 ஜனவரி வரை வெளி நட்டில் வேலை பார்த்து வந்துள்ளார். வாதியின் பாஸ்போர்ட் நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வெளிநாட்டில் இருந்து சம்பாதித்த தொகைகளை கொண்டுதான் தாவா நிலங்களை வாதி கிரயம் பெற்றுள்ளார். வாதி

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.03.27 17:44:49 +0530

வெளிநாட்டில் இருந்ததாலும், அவ்வப்போது ஊருக்கு வந்து சென்றதாலும் நிரந்தரமாக தங்கி நிலங்களை வாதியால் நேரடியாக நிர்வாகம் செய்யவும், பராமரிக்கவும், பாதுகாக்கவும் முடியாமல் இருந்துள்ளது. அதனால் வாதியினுடைய உடன் பிறந்த சகோதரரான 1ம் பிரதிவாதியிடம் தாவா நிலங்களை நிர்வகிக்க 21.08.1996தேதியில் ஒரு பொது அதிகார ஆவணம் மூலம் வாதி அனுமதி கொடுத்து அதன்படி, 1ம் பிரதிவாதி தாவா நிலங்களை நிர்வாகம் செய்து வந்துள்ளார்.

4. இந்நிலையில், வாதி வெளிநாட்டில் இருந்து 2017–ல் ஊருக்கு வந்த பிறகு, தாவா நிலங்களில் இதுநாள்வரை நிர்வாகம் செய்து வரும் பிரதிவாதியிடம், தாவா நிலங்கள் மற்றும் இதர நிலங்களைப் பொறுத்து வரவு செலவு கணக்குகளை காட்டச் சொல்லி கேட்டுள்ளார். மேலும் இனிவரும் காலங்களில் நிலங்களை தானே சாகுபடி செய்து கொள்ள போவதாகவும், 1ம் பிரதிவாதியிடம் வாதி சொல்லியுள்ளார். 1ம் பிரதிவாதியும் அதற்கு சம்மதித்து வேண்டும் போது கணக்கு வழக்கு காட்டுவதாக சொல்லி வாதியிடம் உறுதியளித்துள்ளார். இந்நிலையில், வாதிக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால், தாவா நிலங்களை 1ம் பிரதிவாதியே தொடர்ந்து நிர்வாகம் செய்து வந்துள்ளார். ஆனால் கணக்கு வழக்கு எதுவும் 1ம் பிரதிவாதி காட்டவில்லை. இதற்கிடையில் கடந்த 25.01.2021ம் தேதியில் வாதி, தாவா நிலங்களில் சாகுபடி வேலை செய்வதற்காக ஆட்களை அழைத்துக் கொண்டு சென்றுள்ளார். அதனை தெரிந்து கொண்ட 1ம் பிரதிவாதியும், அவரது மகன்களான 2, 3 பிரதிவாதிகளும் முதன்முறையாக வாதியையும் அவரது ஆட்களையும் மறைத்து தாங்கள் தாவா நிலங்களில் சாகுபடி செய்ய விடமாட்டோம், மீறி நிலத்தில் இறங்கி ஆட்கள் வேலை செய்தால் பெருமளவில் ஆட்களை கொண்டு தடுப்போம் என்று மிரட்டியும், காமகுரோதமாக பேசியும் வாதியிடம் பிரச்சனை செய்துள்ளனர். அதனால் அதிர்ந்து போன வாதி,

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.03.27 17:44:54 +0530

பிரதிவாதிகள் மீது 25/01/2021ம் தேதியில் திருவிடைமருதூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார். அந்தப் புகாரின் உண்மை நகல் வழக்குரையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால் அந்த புகாரின் பேரில் நடவடிக்கை ஏதுமில்லை.

5. தாவா நிலங்களை பொருத்து, பிரதிவாதிகளுக்கு எந்தவித உரிமையும் இல்லை. ஆனாலும், 1ம் பிரதிவாதியின் பிற்போக்கு எண்ணங்களாலும், செயல்களாலும் அதிர்ந்து போன வாதி, தாவா நிலங்கள் மற்றும் இதர நிலங்களைப்பொறுத்து 1ம் பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்ட பொது அதிகார ஆவணம் நடைமுறையில் உள்ளது என்பது சரியானதாக இல்லை என்பதை உணர்ந்து மேற்படி பொது அதிகார ஆவணத்தினை கடந்த 01.02.2021ம் தேதியில் திருவிடைமருதூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ரத்து செய்து விட்டுள்ளார். அதன் ரத்து பத்திரம் நகல் வழக்குரையுடன் வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் ரத்து பத்திரத்தினை வாதி விசாரணை காலத்தில் தாக்கல் செய்வார் என்றும், தாவா நிலங்கள் தொடர்பாக வாதி 03.03.202ம் தேதியில் வில்லங்கம் சான்று வாங்கி பார்த்துள்ளார். கிரயப்பத்திரத்திரங்களின்படி வாதிக்கு சொந்தமாக உள்ள தாவா நிலங்களைப் பொறுத்து எந்த காலத்திலும் வாதியின் சாகுபடி வேலைகளை மறுக்கவோ, தடுக்கவோ, கேட்கவோ அல்லது ஆக்கிரமனம் செய்யவோ பிரதிவாதிகளுக்கு எந்தவித உரிமையில்லை. இருப்பினும் 1ம் பிரதிவாதி தாவா நிலங்களில் நீண்ட காலமாக பவர் ஏஜெண்ட் முறைமையில் பராமரித்து வந்துள்ளதால், அதனை அவருக்கு சாதகமாக்கிக்கொண்டு, வாதியினுடைய மகன்களான மற்ற பிரதிவாதிகளோடு சேர்ந்து கொண்டு, தாவா நிலங்களில் வாதியையும், அவரது ஆட்களையும் சாகுபடி வேலை செய்ய விடாமல் கடந்த 10.04.2021ம் தேதியில் மீண்டும் தடுத்ததால், வாதி மறுபடியும் 10.04.2021ம் தேதியில் திருவிடைமருதூர் காவல்

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.03.27 17:44:58 +0530

நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார். அந்த புகாரின்பேரில் விசாரணை செய்த போலிசார் பிரச்சனை சிவில் சம்மந்தப்பட்டதாக உள்ளதால், உரிய சிவில் நீதிமன்றத்தில் தீர்வு பெற்றுக்கொள்ள அறிவுறுத்தி அனுப்பி வைத்து விட்டனர். இதற்கிடையில், பிரதிவாதிகள் 15.04.2021ம் தேதியில் தாவா நிலங்களில் உள்ள சர்வே எண்ணான 188/2-ல் உள்ள சுமார் ரூ.1 லட்சம் மதிப்புள்ள மரங்களை ஆட்களை கெண்டு, வெட்டியுள்ளார்கள். அதனை கேள்விப்பட்ட வாதி, வாதியினுடைய ஆட்களுடன் சென்று அதனை வெட்ட விடாமல் மடிறத்துள்ளார். ஆனால் சட்டத்தை மதிக்காத பிரதிவாதிகள் வாதியை கொலை மிரட்டல் விடுத்து, மரங்களை வெட்டியுள்ளனர். அதனல் வாதி 15.04.2021ம் தேதியில் திருவிடைமருதூர் காவல் நிலையத்தில் பிரதிவாதிகள் மீது ஒரு புகார் கொடுத்துள்ளார். மேற்படி புகார் மீதான விசாரணை தற்சமயம் நிலுவையில் உள்ளது. அதுபோன்று தங்களுக்கு உரிமை இல்லாத தாவா நிலங்களில் பிரதிவாதிகளின் அத்துமீறல்கள் தொடர்ந்து இருந்து வருவதால், வேறுவழியின்றி வாதி சமூக நீதிமன்றத்தில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார்.

6. மேலும் தாவா நிலங்களில் உள்ள வாதியின் சாகுபடி அனுபவத்தினை தடுக்கவோ, இடையூறு செய்யவோ, ஆக்கிரமனம் செய்யவோ பிரதிவாதகிளுக்கு எவ்வித உரிமையும் இல்லை. ஆனாலும் பிரதிவாதிகள் சட்டத்தை மதிக்காதவர்கள் ஆள்பலம், பணபலம் மிக்கவர்கள். வேண்டுமென்றே வாதிக்கு மிகுந்த நஷ்டத்தை ஏற்படுத்த வேண்டும் என்கிற கெட்ட எண்ணத்தில் வாதிக்கு சொந்தமான நிலங்களை வாதி அனுபவம் செய்வதை தடுக்கவும், இடையூறு செய்யவும், ஆக்கிரமனம் செய்யவும் பிரதிவாதிகள் எந்த நேரமும் முயற்சிப்பார்கள் என்ற அச்சம் வாதிக்கு வெகுவாக உள்ளது. எனவே தாவா நிலங்களில் பிரதிவாதகளோ அவர்களது ஆட்களோ அல்லது அவர்களது

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.03.27 17:45:03 +0530

முகவர்களோ அல்லது பிரதிவாதிகளிடம் உரிமைகோரும் மற்ற நபர்களோ வாதிக்கு சொந்தமான தாவா சாகுபடி நிலங்களில் உள்ள சாகுபடி அனுபவத்தினை தடுக்கவோ, இடையூறு செய்யவோ, அல்லது ஆக்கிரமனம் செய்யவோ கூடாது என அதனை உடனடியாக தடுக்கும் பொருட்டு ஒரு நிலையான நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி சமூகம் நீதிமன்றம் வரவேண்டிய சூழல் வாதிக்கு ஏற்பட்டுள்ளதேயன்றி வேறொன்றும் இல்லை. வழக்கின் அவசரம் கருதி ஒரு இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் ஒன்றிற்கான மனுவும் வழக்குரையோடு வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1ம் பிரதிவாதிக்கு வாதியால் கொடுக்கப்பட்டுள்ள பவர் பத்திரம் ரத்து செய்யப்பட்டுவிட்டதால், பவர் ஏஜெண்ட் முறைமையில் தாவா நிலங்கள் நிர்வாகம் செய்து வந்து, 1ம் பிரதிவாதி வாதிக்கு கொடுக்க வேண்டிய கணக்கு வழக்குகள் உரிய காலங்களில் கொடுக்கவில்லை என்றால் அதற்கு தனியாக 1ம் பிரதிவாதிக்கு முறைப்படி அறிவிப்பு அனுப்பி தனி வழக்கு தாக்கல் செய்யும் உரிமையினை வாதி இதன் மூலம் தக்க வைத்துக் கொண்டுள்ளார். தாவா நிலங்கள் தொடர்பான கிரய நடவடிக்கைகள் 1996 மற்றும் அதற்கு பின்னிட்டு ஏற்பட்டிருந்தாலும், தாவா சொத்தில் பிரச்சனை இருப்பது மற்றும் பிரச்சனை ஏற்பட்டது என்பது 25.01.2021 மற்றும் 10.04.2021, 15.04.2021 என்பதாலும் அதன்பிறகே காலவரையறை தொடங்குகிறது. எனவே பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர் வழக்குரையின் சுருக்கம்</u>**

7. வாதி வழக்கு தாக்கல் செய்யும்போது வழக்கு சொத்தின் உரிமையாளராக இருந்து வழக்குமூலம் ஏற்பட்ட பின்னர் வாதி உடல்நிலை சரியில்லாத நிலையில், மேற்படி வாதி அவரது வாரிசுகளுக்கு ஆவணம் எழுதிவைத்துள்ள

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.03.27 17:45:09 +0530

நிலையில், இந்த வழக்கு சொத்தை பொறுத்து 30/12/2022ம் தேதியில் அவரது வாரிசுகளிடமிருந்து பதிவு செய்யப்பட்ட பொது அதிகாரம் ஆவணம் எழுதி பெற்றுள்ளார். வழக்கு சொத்தின் அனுபவமும், சுவாதீனமும் வாதி வசமே உள்ளது. மேற்படி அசல் வழக்கை பொறுத்து பிரதிவாதி தரப்பு சாட்சி விசாரணைக்கு வாய்தா போடப்பட்டுள்ள நிலையில் நீதிமன்ற நேரத்தையும், காலத்தையும் வீணடிக்கும் நோக்கத்தோடு தற்போது இந்த மனுவினை மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே வாதியின் வழக்கினை தள்ளுபடி செய்ய கோரி எதிர் வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8. வழக்குரை மற்றும் பதிலுரை ஆகியவை பரிசீலிக்கப்பட்டு, பின்வரும் எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளது.

<u>எழுவினாக்கள்;</u>

**1. வாதிக்கு சொந்தமான தாவா சாகுபடி நிலங்களில் பிரதிவாதிகளோ, அவரது ஆட்களோ, அவரது முகவர்களோ எந்த வகையிலும் அனுபவத்தில் இடையூறோ, ஆக்கிரமிப்போ செய்யக்கூடாது என்று பிரதிவாதிகளுக்கு எதிராக வாதி கோரும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?**

**2. வாதிக்கு கிடைக்கக்கூடிய வேறு பரிகாரம் என்ன?**

வாதி தரப்பில் வாதி வ.சா.1 ஆகவும் பாலசந்திரன் வா.தி.2ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வா.சா.1ன் மூலம் வா.சாஆ.1 முதல் வா.சா.ஆ.9 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் பிரதிவாதி பி.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலமாக பி.சாஆ.1 மற்றும் பி..சா.ஆ.2 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.03.27 17:45:14 +0530

9. இருதரப்பிலும் எழுத்துமூலமான வாதுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இரு தரப்பிலும் செய்யப்பட்ட வாதம் மற்றும் ஆவணங்கள் கவனத்துடன் பரிசீலிக்கப்பட்டது.

10. இரு தரப்பில் செய்யப்பட்ட வாதம், வாதி மற்றும் பிரதிவாதி தரப்பில் முன்னிறுத்தப்பட்ட சாட்சியங்கள் மற்றும் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டு இந்நீதிமன்றம் பின்வருமாறு தீர்வு காண்கிறது.

11. வாதி தரப்பில் வாதி வ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் வழக்குரையில் கண்டுள்ள பொருண்மைகள் குறித்து சாட்சியம் அளித்துள்ளார். 19/11/1996ம் தேதியிட்ட கிரய பத்திரம் சார்பதிவாளர் அலுவலக நகல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 24/03/1998ம் தேதியிட்ட கிரய பத்திரம் சார்பதிவாளர் அலுவலக நகல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 31/03/1998ம் தேதியிட்ட கிரய பத்திரம் சார்பதிவாளர் அலுவலக நகல் வா.சா.ஆ.3ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 22/12/1999ம் தேதியிட்ட கிரய பத்திரம் சார்பதிவாளர் அலுவலக நகல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 31/12/1999ம் தேதியிட்ட கிரய பத்திரம் சார்பதிவாளர் அலுவலக நகல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 13/10/1999ம் தேதியிட்ட கிரய பத்திரம் சார்பதிவாளர் அலுவலக நகல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 03/03/2000ம் தேதியிட்ட கிரய பத்திரம் சார்பதிவாளர் அலுவலக நகல் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 21/08/1996ம் தேதியிட்ட வாதி 1ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த பொது அதிகார ஆவணம் சார்பதிவாளர் அலுவலக நகல் வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வாதியின் பாஸ்போர்ட்டின் அசலுடன் ஒப்பிடப்பட்ட நகல் வா.சா.ஆ.9ஆக

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.03.27 17:45:20 +0530

குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் 1ம் பிரதிவாதி பி.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் வழக்குரையில் கண்டுள்ள பொருண்மைகள் குறித்து சாட்சியம் அளித்துள்ளார். 14/11/2022ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணம் கணினி நகல் பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்துக்களுக்கான கணினி பட்டா (2எண்ணிக்கை) பி.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

12. வாதி தரப்பில் வா.சா.2 பாலசந்திரன் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், தான் இந்த வழக்கின் தரப்பினர் அல்ல என்றும், வழக்கின் வாதி, பிரதிவாதிகளை தனக்கு நன்கு தெரியும் என்றும், இந்த வழக்கின் வாதி, பிரதிவாதிகள் மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி வாதி தான் குத்தகை சாகுபடி செய்த திருமாந்துறை, திருமங்கலக்குடி கிராமத்தில் உள்ள நிலத்திற்கு அருகில் வாதிக்கு சொந்தமான விவசாய நிலங்கள் உள்ளன என்றும், மேற்படி விவசாய நிலங்களில் பிரதிவாதிகள் அத்துமீறி வாதிக்கு இடையூறு செய்ய முயற்சித்ததால் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி வழக்கு சொத்தில் தற்போது வாதிதான் சாகுபடி செய்து வருகிறார் என்றும், பிரதிவாதிகள் வாதிக்கு சொந்தமான சொத்தில் இடையூறு செய்ய முயற்சி செய்தது தொடர்பாக காவல்துறை விசாரணைக்கு தான் உடன் சென்றிருந்ததாகவும், மேற்படி விபரம் தனக்கு தெரியும் என்றும், மேற்படி வாதிக்கு திருமங்கலக்குடி மணலூர், சூரியனார்கோயில் கிராமங்களில் விவசாய நிலங்கள் சொந்தமாக உள்ளன என்றும், அந்த விபரங்கள் தனக்கு நேரடியாக தெரியும் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

RANGESWARI
Digitally signed by RANGESWARI
Date: 2026.03.27 17:45:26 +0530

13. பிரதிவாதி தரப்பில் பிரதிவாதி என்பவர் பி.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், வழக்குரையின் தான் வாதியின் உடன்பிறந்த சகோதரர் என்றும், வாதியின் பொது அதிகார முகவராக கடந்த 21.08.1996ம் தேதி வரையில் செயல்பட்ட நபர் என்றும், மேற்படி தான் வாதியின் பொது அதிகார முகவராக செயல்பட்டு வந்ததை வாதியே ஒப்புக்கொண்டுள்ளார் என்றும், வாதி கடந்த 2017ம் ஆண்டில் வெளிநாட்டிலிருந்து தாயகம் திரும்பியதாகவும், அதுசமயம் தன்னிடம் தாவா நிலங்கள் பொறுத்து வரவு செலவு கணக்கை கேட்டதாகவும், அதன் தொடர்ச்சியாக தாவா நிலங்களின் நிர்வாகத்தை வாதி ஏற்கபோவதாகவும், வழக்குரையில் வாதி தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், தாவா நிலங்களை பொறுத்து தன் மூலம் பொது அதிகார முகவர் என்ற நிலையில் உரிய வரவு செலவு கணக்கை வாதிவசம் ஒப்படைக்கப்பட்டது என்பதை வாதி தரப்பில் மறைமுகமாக ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது என்றும், அத்துடன் தாவா நிலங்களில் சுவாதீனத்தை வாதி அடைந்து கொள்ளவில்லை என்பதும், தாவா நிலங்களின் சுவாதீனம் தன்துவசம் இருந்து வந்ததை வாதி வழக்குரையில் ஒப்புக்கொண்டுள்ளார் என்றும், வாதி வழக்குரையில் தாவா நிலங்களின் சுவாதீனத்தில் வாதி கடந்த 04/05/2021ம் தேதியில் நுழைய சென்றதாகவும், அதனை தாங்கள் தடுத்து நிறுத்திவிட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், உண்மையில் தாவா சொத்து சுவாதீனம் மற்றும் அனுபவத்தில் வாதி இருந்து வராத நிலையில், வேறு 3ம் நபரின் சுவாதீனத்திற்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் வாதி தாவா சொத்தில் சட்டவிரோதமாக நுழைய முற்பட்டது என்றும், வாதி வழக்குரையின் மூலம் தெள்ளத்தெளிவாக தெரிய வருகிறது.

14 தாவா நிலங்களின் சுவாதீனம் 3ம் நபரான சீனிவாசநல்லூரை சேர்ந்த திரு.அறிவரசு த/பெ. சின்னவேல் என்பவரிடம் இருந்து வருகின்றது என்றும்,

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.03.27 17:45:31 +0530

அதன் விபரம் வாதிக்கு நன்கு தெரிந்தும் திரு.அறிவரசு சுவாதீனத்திற்கு இடையூறு செய்யும் நோக்கத்துடன் வாதி சட்டவிரோத லாபநோக்கத்துடன் தாவா நிலங்களில் சுவாதீனத்தில் நுழைய முற்பட்டது ஏற்புடைய ஒன்றல்ல என்றும், தாவா வழக்குரையில் தாவா நிலங்கள் வாதிக்கு சொந்தமென குறிப்பிடப்பட்டுள்ளது தவறான ஒன்றாகும் என்றும், ஏனெனில் தாவா சொத்துக்கள் வாதியின் சம்மதத்துடன் 27/12/2020ம் தேதியில் 3ம் நபரான திரு.அறிவரசு என்பவருக்கு கிரய ஒப்பந்தம் ஒன்றினை தான் ஏற்படுத்தி அதன் தொடர்ச்சியாக 3ம் நபரான திரு.அறிவரசிடமிருந்து ரூ.50,00,000/–த்தினை கிரய முன்தொகையாக பெற்று அந்த கிரய முன் தொகை ரூ.50,00,000/–த்தினை வாதியிடம் ஒப்படைக்கப்பட்டும் தாவா நிலங்களின் சுவாதீனத்தை 3ம் நபர் அறிவரசு வசம் ஒப்படைக்கப்பட்டதை வாதி வழக்குரையில் மறைத்துள்ளார் என்றும், வாதி வழக்குரையில் வாதிக்கு தாவா நிலங்களை பொறுத்து நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் பெறுவதற்கு தோற்ற வழக்கு மற்றும் வசதிவாய்ப்பு நிலை ஏற்பட்டதாக வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. தாவா நிலங்களை 3ம் நபருக்கு கிரய ஒப்பந்தம் ஏற்படுத்தி, தாவா சொத்துக்களின் சுவாதீனத்தை 3ம் நபர்வசம் ஏற்கனவே ஒப்படைக்கப்பட்ட நிலையில் வாதிக்கு தாவா சொத்துக்களை பொறுத்து கிரய பாக்கியினை பெற்றுக் கொள்ளும் உரிமையினை தவிர வேறு எந்த உரிமையும் இல்லை என்றும், குறிப்பாக சுவாதீன அனுபவ உரிமை ஏதும் இருந்து வரவில்லை என்றும், வாதி வழக்குரையில் அவரது பொது அதிகார முகவர் ஆகிய தன் மூலம் தாவா சொத்துக்களை பொறுத்து கிரய நடவடிக்கைகள் 1999ம் ஆண்டு மற்றும் அதற்கு பின்னிட்ட தேதிகளில் ஏற்பட்டதை வாதி ஒப்புக் கொண்டுள்ளார் என்றும், மற்றப்படி கடந்த 04/05/2021ம் தேதியில் தாவா சொத்தில் பிரச்சனை ஏற்பட்டதாக வாதி தரப்பில் குறிப்பிட்டுள்ளதை வாதியே நிரூபிக்க கடமைப்பட்டவர் என்றும், வாதி வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள சொத்து

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.03.27 17:45:36 +0530

விபரம்தொடர்பாக நான்கெல்லை தவறான ஒன்றாகும் என்றும், அதுபோல் விஸ்தீரணம் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், வாதி உரிய நீதிமன்ற ஆளுகையின் கீழ் பரிகாரம் கோரி வழக்கு தொடரவில்லை மற்றும் உரிய நீதிமன்ற கட்டணத்தை செலுத்தவில்லை என்றும், வாதி வழக்குரையிடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் ஏதும் வாதியின் அனுபவம் மற்றும் சுவாதீனத்தை நிலைநிறுத்தக்கூடிய ஒன்றல்ல என்றும், தான் வாதியின் சட்டப்படியான பொது அதிகார முகவர் என்ற நிலையில் தாவா நிலங்கள் மற்றும் கட்டிடத்தை பொறுத்து 3ம் நபரான திரு.அறிவரசு என்பவரிடம் கடந்த 27/12/2020ம் தேதியில் கிரய ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்திக்கொண்டு கிரயத்தொகையாக ரூ.75,00,000/-த்தினை நிர்ணயம் செய்து அந்த கிரய நடவடிக்கை தொடர்பாக முன் தொகையாக ரூ.50,00,000/-த்தினை 27/12/2020ம் தேதியில் 3ம் நபர் திரு.அறிவரசு என்பவரிடம் பெற்றுக்கொண்டு தாவா சொத்தின் சுவாதீனத்தை மேற்படி அறிவரசு வசம் ஒப்படைக்கப்பட்டது என்றும், கிரய ஒப்பந்த கால நிர்ணயம் ஓர் ஆண்டாகும் என்றும், இவ்வாறான கிரய ஒப்பந்த நடவடிக்கை சொத்து சுவாதீன ஒப்படைப்பு ஆகியவை வாதியின் அறிவுக்கு எட்டிய வகையில் நடைபெற்ற ஒன்றாகும் என்றும், அதனை வாதி மறைத்தும், தாவா நிலங்கள் மற்றும் கட்டிடத்தை பொறுத்து அதிகப்படியான விலைக்கு வேறு நபரிடம் விலைபேசி அதன் தெடார்ச்சியாக சட்டவிரோத லாபநோக்கத்துடன் இந்த வழக்கரையினை தாக்கல் செய்துள்ளார் என்றும், வாதி தாவா சொத்துக்களை பொறுத்து கிரயம் ஒப்பந்தம் ஏற்படுத்திய அறிவரசினை ஏமாற்றும் நோக்கத்துடன் சாசன பதிவை தவிர்க்கும் பொருட்டு முகாந்திரம் ஏதுமில்லாமல் வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றும், வாதி திட்டமிட்டு பின்னால் கட்சி நடத்துவதற்கு ஏதுவாக தனக்கு கொடுத்த பொது அதிகாரத்தை ரத்து செய்துள்ளார் என்றும், மேற்படி வாதி அவரது பொது அதிகார முகவரான தனக்கு வழங்கிய பொது அதிகார ஆவணம் நடைமுறையில் இருந்த பொழுது

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.03.27 17:45:42 +0530

மேற்படி 3ம் நபருக்கு கிரயம் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டும் அதன் தொடர்ச்சியாக சொத்தின் சுவாதீனம் ஒப்படைப்பும் நடைபெற்றுள்ளது என்றும், தான் சட்டப்படியாகவும், நியாயப்படடியாகவும் செயல்பட்டுள்ள்ளார் என்பதை தெள்ளத்தெளிவாக தெரிய வருகிறது என்றும், தாவா சொத்தின் சுவாதீனம் வாதிவசம் இருந்து வருவதாக வாதி தரப்பில் குறிப்பிடப்பட்ட நிலையில் அதனை நிரூபிக்கும் கடமை வாதியை சார்ந்ததாகும் என்றும், வாதியின் வழக்குரையில் 2ம் பிரதிவாதியாக குறிப்பிடப்பட்ட ஜெயலலிதா மற்றும் 3ம் பிரதிவாதியாக குறிப்பிடப்பட்ட சூரியபிரகாஷ் என்ன காரணத்திற்காக வழக்கின் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டார்கள் என்பதை பொறுத்து விளக்கம் ஏதும் இல்லை என்றும், அத்துடன் அத்தியாவசிய தரப்பினர் ஆகிய அறிவரசை சேர்க்கவில்லை என்றும், தாவா சொத்திற்கு தொடர்பில்லாத வாதிக்கும், தங்களுக்குண்டான உறவுமுறை மறைக்கப்பட்டதின் மூலம் தாவா சொத்தினை பொறுத்து தங்களுக்கு எந்தவையிலோ, உரிமை இருந்து வருவதை வாதி மறைமுகமாக ஒப்புக் கொள்கிறார் என்றும், இல்லாவிடில் தங்கள் அனைவரையும் வழக்கின் தரப்பிராக சேர்க்க வேண்டிய அவசியம் ஏதுமில்லை என்றும் மேற்கண்ட நபர்களை வழக்கில் தரப்பினராக சேர்த்ததை கொண்டு வாதியின் எண்ணம் கெட்ட எண்ணம் என்பதால் வாதி தூயகரத்துடன் நீதிமன்றத்தை நாடவில்லை என்பது தெள்ளத்தெளிவாக தெரியவருகிறது என்றும், 3ம் நபர் அறிவரசு தாவா சொத்துக்களின் கிரய ஒப்பந்ததாரர் என்பது வாதிக்கு வழக்கிற்கு பின்பு தெரிய வந்ததாக வைத்துக் கொண்டாலும் இன்றுவரை மேற்படி கிரய ஒப்பந்த தரப்பினர் அறிவரசை பொறுத்து அவரை வழக்கின் தரப்பினராக சேர்ப்பதற்கு வாதி எவ்வித முயற்சியும் மேற்கொள்ளவில்லை என்றும், அதுபோல் வாதி தாவா சொத்து சுவாதீனம் பொறுத்து கிரய ஒப்பந்ததாரர் அறிவரசுவிற்கு எதிராக பரிகாரம் ஏதும் கோரவில்லை என்றும், வாதி அசல் வழக்கு தாக்கல் செய்து வழக்கை மேல்நடத்தி வந்து கொண்டிருந்த நிலையில் கடந்த 14.112022ம் தேதியில் தாவா

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.03.27 17:45:47 +0530

சொத்துக்களை பொறுத்து ஆவணம் மாற்றம் செய்துள்ளார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

15. 19/11/1996ம் தேதியிட்ட கிரய பத்திரம் சார்பதிவாளர் அலுவலக நகல் வா.சா.ஆ.1 கிரய பத்திரத்தினை பரிசீலனை செய்ததில், திருவிடைமருதூர் சார்பதிவாளர் அலுவலகம் சான்றொப்பம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிது. 24/03/1998ம் தேதியிட்ட கிரய பத்திரம் சார்பதிவாளர் அலுவலக நகல் வா.சா.ஆ.2 கிரய பத்திரத்தினை பரிசீலனை செய்ததில், திருவிடைமருதூர் சார்பதிவாளர் அலுவலகம் சான்றொப்பம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிது. 31/03/1998ம் தேதியிட்ட கிரய பத்திரம் சார்பதிவாளர் அலுவலக நகல் வா.சா.ஆ.3 கிரய பத்திரத்தினை பரிசீலனை செய்ததில், திருவிடைமருதூர் சார்பதிவாளர் அலுவலகம் சான்றொப்பம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிது. 22/12/1999ம் தேதியிட்ட கிரய பத்திரம் சார்பதிவாளர் அலுவலக நகல் வா.சா.ஆ.4 கிரய பத்திரத்தினை பரிசீலனை செய்ததில், திருவிடைமருதூர் சார்பதிவாளர் அலுவலகம் சான்றொப்பம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிது. 31/12/1999ம் தேதியிட்ட கிரய பத்திரம் சார்பதிவாளர் அலுவலக நகல் வா.சா.ஆ.5 கிரய பத்திரத்தினை பரிசீலனை செய்ததில், திருவிடைமருதூர் சார்பதிவாளர் அலுவலகம் சான்றொப்பம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிது. 13/10/1999ம் தேதியிட்ட கிரய பத்திரம் சார்பதிவாளர் அலுவலக நகல் வா.சா.ஆ.6 கிரய பத்திரத்தினை பரிசீலனை செய்ததில், திருவிடைமருதூர் சார்பதிவாளர் அலுவலகம் சான்றொப்பம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிது. 03/03/2000ம் தேதியிட்ட கிரய பத்திரம் சார்பதிவாளர் அலுவலக நகல் வா.சா.ஆ.7 கிரய பத்திரத்தினை பரிசீலனை செய்ததில், திருவிடைமருதூர் சார்பதிவாளர் அலுவலகம் சான்றொப்பம் செய்து

RANGESWARI
Digitally signed by RANGESWARI
Date: 2026.03.27 17:45:58 +0530

கொடுக்கப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிது. 21/08/1996ம் தேதியிட்ட வாதி 1ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த பொது அதிகார ஆவணம் சார்பதிவாளர் அலுவலக நகல் வா.சா.ஆ.8 பொது அதிகார ஆவணத்தை பரிசீலனை செய்ததில், திருவிடைமருதூர் சார்பதிவாளர் அலுவலகம் சான்றொப்பம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிது. வாதியின் பாஸ்போர்ட்டின் அசலுடன் ஒப்பிடப்பட்ட நகல் வா.சா.ஆ.9ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் 1ம் பிரதிவாதி பி.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் வழக்குரையில் கண்டுள்ள பொருண்மைகள் குறித்து சாட்சியம் அளித்துள்ளார். 14/11/2022ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணம் கணினி நகல் பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்துக்களுக்கான கணினி பட்டா (2எண்ணிக்கை) பி.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது.

16. வழக்கானது வாதி தரப்பு சாட்சிகள் விசாரணை முடிக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு சாட்சி விசாரிக்கப்பட்டு, பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை நிலுவையில் இருந்தபோது இருதரப்பிலும் சமாதானம் பேசப்பட்டு, அதன் அடிப்படையில் சமாதான உடன்படிக்கை மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு மனு பதிவுசெய்யப்பட்டுள்ளது. வாதி மற்றும் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யும் சமரச மனுவில் 1ம் பிரதிவாதியும், வாதியும் சகோதரர்கள் என்பதால் பொது மனிதர்கள் முன்னிலையில் சமரசமாக பேசி சமரசமாகிவிட்டபடியால் பிரதிவாதி இனி மேற்படி வழக்கை நடத்த விரும்பவில்லை என்பதனால் வாதி தரப்பில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம்கோரி தாக்கல் செய்யப்பட்ட மேற்படி வழக்கில் வாதிக்கு சார்பாக தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை வழங்குவதில் பிரதிவாதிகள் தரப்பில் எந்தவித

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.03.27 17:46:03 +0530

ஆட்சேபணையும் இல்லை என இதன் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. சமரச உடன்படிக்கை மனு இந்த வழக்கின் ஒரு அங்கமாக பாவிக்கப்படுகிறது.

**இறுதியாக வாதி மற்றும் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சமரச உடன்படிக்கையின் அடிப்படையில் வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு வழங்கி இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. செலவுத் தொகை இல்லை.**

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின், இன்று (27/03/2026) இத்திறந்த நீதிமன்றத்தில் இவ்அவையறிய பகரப்படுகிறது.

RANGESWARI

Digitally signed by RANGESWARI
Date: 2026.03.27 17:46:11 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர்**.( **மு.கூ.பொ**.)

**<u>வாதி தரப்பு சாட்சிகள்;</u>**

| | |
|---|---|
| வா.சா.1 | திரு. பன்னீர்செல்வம் (வாதி) |

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்;</u>**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 19/11/1996 | கிரய பத்திரம் சார்பதிவாளர் அலுவலக நகல் |
| வா.சா.ஆ.2 | 24/03/1998 | கிரய பத்திரம சார்பதிவாளர் அலுவலக நகல் |
| வா.சா.ஆ.3 | 31/03/1998 | கிரய பத்திரம் சார்பதிவாளர் அலுவலக நகல் |
| வா.சா.ஆ.4 | 22/12/1999 | கிரய பத்திரம் சார்பதிவாளர் அலுவலக நகல் |
| வா.சா.ஆ.5 | 31/12/1999 | கிரய பத்திரம் சார்பதிவாளர் அலுவலக நகல் |
| வா.சா.ஆ.6 | 13/10/1999 | கிரய பத்திரம் சார்பதிவாளர் அலுவலக நகல் |
| வா.சா.ஆ.7 | 03/03/2000 | கிரய பத்திரம் சார்பதிவாளர் அலுவலக நகல் |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.8 | 21/08/1996 | வாதி, 1ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த பொது அதிகார ஆவணம் சார்பதிவாளர் அலுவலக நகல் |
| வா.சா.ஆ.9 | -- | வாதியின் பாஸ்போர்ட்டின் அசலுடன் ஒப்பிடப்பட்ட நகல் |

**நீதிமன்ற சான்றாவணங்கள்;** இல்லை

**பிரதிவாதி தரப்பு சாட்சி ;**

| | |
|---|---|
| பி.சா.1 | சுந்தரேசன் (1ம் பிரதிவாதி) |

**பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்;**

| | | |
|---|---|---|
| பி.சா.ஆ.1 | 14/11/2022 | செட்டில்மெண்ட் ஆவணம் கணினி நகல் |
| பி.சா.ஆ.2 | -- | தாவா சொத்துக்களுக்கான கணினி பட்டா (2எண்ணிக்கை) |

**பிரதிவாதி தரப்பு சாட்சிய சான்றாவணங்கள்;** இல்லை

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.03.27 17:46:19 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திருவிடைமருதூர்(மு.கூ.பொ.)**